1994 ஏப்ரல் 22]

போதுமான வரவேற்பு இல்லை. அப்படி போதுமான வரவேற்பு இல்லாத காரணத்தாலும், வாய்ப்பு இல்லாததாலும் அங்கே சாத்தியக்கூறு இல்லை. மேலும் விராலிமலைப் பகுதியில் வீட்டுவசதித் திட்டம் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தினுடைய செயற்குறிப்பில் தற்போது பரிசீலனையில் இல்லை.

திரு. சி. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் கீரனூரில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பகுதி-2-ல் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் வீடுகட்டுவதற்கு ஆணையிட்டதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 349. திருமதி அ. தி. சரஸ்வதி, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

349—

தாளவாடி மலைப் பகுதியில் பழப்பண்ணை அமைத்தல்

***24774**—திருமதி அ. தி. சரஸ்வதி:*

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பரா—

(அ) தாளவாடி மலைப் பகுதியில் பழப்பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தாளவாடி மலைப் பகுதியில் பழப்பண்ணை அமைக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

(ஆ) எனவே, கேள்வி எழவில்லை.

திருமதி அ. தி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாரி வாரி வழங்கும் குணம் படைத்த இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் இல்லை என்ற சொல்லுக்கு இடம் இல்லை. நமது அமைச்சர் அவர்கள் தாளவாடியில் பழப்பண்ணை அமைக்கும் திட்டம் இல்லை என்று சொன்னாலும், சத்தியமங்கலம் பகுதியில் பன்னாரிக்கு அருகிலே ராஜ் நகர் என்ற இடத்திலே பழப்பண்ணை அமைக்க ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாளவாடி என்பது பெரியார் மாவட்டத்தினுடைய எல்லைப் பகுதியில் இருக்கிறது. மலைப் பகுதி. அங்கே பழப்பண்ணை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1994 ஏப்ரல் 22 முற்பகல் 10.30

திருமதி அ. தி. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஊட்டி, கொடைக்கானல் போன்றவற்றில் அரசு சார்பாக பழப்பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதுபோல தாளவாடியிலும் ஊட்டி கிளைமேட் இருக்கிறது. மற்றும் அங்கு காலங்காலமாக பாதிக்கப்பட்ட மலைவாழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அங்கு எல்லா வசதிகளும் இருக்கிறது. அதனுடைய விபரம் என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடத்தில் தரப்பட்டுள்ள குறிப்பில் தாளவாடியில் காப்பியில் பல அடுக்குபயிர் செய்ய அரசு திட்டமிட்டிருக்கிறது. சம வெளிப் பகுதியான சத்தியமங்கலம், கோபி, பவானி ஆகிய இடங்களில் சாத்துக்குடி, கொய்யா போன்ற வகைகளும் மற்றும் ஈரோடு, காங்கேயம், தாராபுரம் பகுதிகளில் மா, கொய்யா, சப்போட்டா போன்ற பயிர்களும் அங்கு பயிரிடுவதற்கு அரசு திட்டமிட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. பெரியசாமி.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாளவாடி பகுதி தமிழ்நாடு மற்றும் கர்நாடகா எல்லைப் பகுதியாகும். நல்ல சீதோசண நிலை உள்ள பகுதி. பழமரங்களை அதிகமாக அங்குள்ள தனியார்கள் பயிரிட்டுக் கொண்டிருக்கிறார்கள். மா, கொய்யா, பலா போன்ற பழவகைகள் மிக அதிகமாக பயிரிடப்படுகின்றன. அதேபோல் அதற்கு அருகிலுள்ள அந்தியூரிலே, பர்கூரில் மலைப் பகுதியிலே அதிகமான வியாபாரிகள் உயர்ந்தரக பழவகைகளை அதிகமாக பயிர் செய்கிறார்கள். கருணை கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் எங்களை எல்லாம் வாழவைத்துக் கொண்டிருக்கும் அன்னையிடம் சொல்லி தாளவாடியிலே அல்லது பர்கூர் மலைப் பகுதிக்கு நீங்கள் ஒரு பழப்பண்ணையை ஏற்படுத்திக் கொடுக்க மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் மூலமாக உங்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழப்பண்ணை என்பது அரசால் நடத்தப்பட்டு பழப் பயிரில் ஆர்வம் உள்ள விவசாயிகள் பழத் தோட்டம் அமைப்பதற்காக பயிற்சிகள் வழங்கவும் நாற்றுக்களை உருவாக்கித் தருவதற்கும் அது ஒரு முன்னோடிப் பண்ணையாக அமையவேண்டும் என்கிற கருத்திலேதான் அரசு இதுபோன்ற எண்ணங்களை, திட்டங்களை பரிசீலித்து வருகிறது. எனவே, பெரியார் மாவட்டத்தில் மாண்புமிகு உறுப்பினர் அந்தியூர் பெரியசாமி சொன்னது போல் அனைத்து பழங்களும் அங்கே விளைவிக்க

வாய்ப்பு இருக்கிறது. எனவே பவானிசாகரில் பழப்பண்ணை அமைப்பதற்கு தோட்டக்கலை இயக்குநர் அவர்கள் அரசினுடைய அனுமதி கோரி இருக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 350, திரு. எஸ். ஆசைமணி, மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்.

350—

குத்தாலம் தொகுதி, பருத்திக்குடி ஊராட்சியில் கால்நடை மருத்துவ நிலையம் அமைத்தல்

***23094**—திரு. எஸ். ஆசைமணி :*

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, பருத்திக்குடி ஊராட்சியில் "கால்நடை மருத்துவ நிலையம்" அமைத்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. தே. ஜனார்த்தனன், பால்வளத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் பருத்திக்குடி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க செயற்குறிப்பு உள்ளதா என்று கேட்டதற்கு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லி இருக்கிறார்கள். அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்கள் அதிகமான கால்நடைகளை வளர்த்து வருகின்ற காரணத்தால் தூரத்தை கணக்கில் கொள்ளாமல் அங்கே வருகின்ற நிதியாண்டில் கால்நடை மருத்துவமனை அமைக்க அமைச்சர் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்த்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு தற்போதுள்ள கடுமையான நிதிப் பற்றாக்குறையைப் பற்றி மிக நன்றாகத் தெரியும். அதனால் தற்போது சாத்தியம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 351, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்.